16.08.2022

O.S No. 104/2018

**P.W.1 முருகானந்தம்**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-</u>**

இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வா .சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் கண்டுள்ள சாட்சி ஜெயபால் நீதிமன்றத்திற்கு வெளியில்தான் அமர்ந்துள்ளார் . அவருடன் பேசிக்கொண்டிருந்தேன் . நான் கடந்த 2001ம் ஆண்டிலிருந்து டிராவல்ஸ் ஏஜென்சி வைத்து வாடகைக்கு வாகனம் விடும் தொழில் செய்து வருகிறேன். வாகன உரிமையாளர் என்ற முறையில் நான் கண்டிப்பாக கைபேசி வைத்திருக்கவேண்டும். எனக்கு இரு கைபேசி இணைப்புகள் உள்ளது . 1) 9443401487, 2) 9003302336. எனக்கு சொந்தமான வாகன எண்.TN57BB6986 ஆகும் தவறுதலாக TN57BB6987 என்று தவறுதலாக உள்ளது. நான் மோட்டார் தொழிலில் உள்ளதால் ஒரு வாகன கோப்புகளை பார்த்தால் அது என்னுடையதா, இல்லையா என்பதை கூறமுடியும். நான் 2010ம் ஆண்டிலிருந்து தற்போது வரை போதுமான வருமானம் வைத்துள்ளேன் . நான் கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படுமா என்றால் தேவைப்பட்டால் வாங்குவேன். ஆக நான் இடைப்பட்ட காலங்களில் கடன் வாங்கும் சூழ்நிலையில் இருந்தேன் என்றால் தேவைப்படும்போது வாங்கியுள்ளேன் . என்னிடம் காண்பிக்கப்படும் படிவம் 24ல் கண்டுள்ள வாகனம் TN57BB6986 என்னுடையதுதான். அந்த ஆவணம் பி .வா.சா.ஆ.3 ஆகும். மேற்படி ஆவணத்தின் உரிமையாளரான பி.முருகானந்தம் ஆகிய என்னுடைய முகவரி திண்டுக்கல், ஆர்.எம். காலனி, 4வது குறுக்குத்தெரு என்றுதான் நிரந்தர முகவரி மற்றும் தற்காலிக முகவரியாக குறிப்பிடப்பட்டுள்ளது . இந்த வழக்கில் நான் தெரிவிக்கப்பட்டுள்ள திருச்சி காட்டுர் முகவரி என்பது தற்காலிக முகவரியா அல்லது நிரந்தர முகவரியா என்றால் நிரந்தர முகவரிதான் . மேலும் பி.வா.சா.ஆ.3 ல் குறிப்பிடப்பட்டுள்ள TN57BB6986 வாகனம் வங்கியில் கடன் வாங்கிதான் 2016ம் ஆண்டு வாங்கப்பட்டது. இன்னும் இதில் கடன் நிலுவையில் உள்ளது என்றால் முடிந்துவிட்டது என்று சாட்சி கூறுகிறார் . கடன் தொகை நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல . நான் மேற்படி வாகனத்தை ரூ.12 லட்சம் கடன் வாங்கி வாங்கினேன் . இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ள ஜெயபால் என்பவர் நண்பர் ஆவார் . நண்பர் ஆகையால் அவரைப்பற்றி எனக்கு எல்லாம் முழுமையாக தெரியாது. ஜெயபால் தற்போது

என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்துவரவில்லை . நான் வேறு எவருக்கும் கடனுறுதிச்சீட்டு வாயிலாக பணம் கொடுக்கல் , வாங்கல் இல்லை. நான் திருச்சி மாவட்ட நீதிமன்றத்தில் அ .வ.எண்.103/2018 என்ற வழக்கை வசந்தி என்ற நபர்மீது கொடுத்தேன் . அந்த வழக்கிலும் கடனுறுதிச்சீட்டு வாயிலாகதான் வழக்கு தாக்கல் செய்தேன் . மேற்படி வழக்கானது இரண்டாவது மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றது. தற்போது அந்த வழக்கானது முடிவுக்கு வந்து நிறைவேற்று மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது . அந்த அ.வ.எண்.103/2018 வழக்கிலும் ஜெயபால் என்பவர்தான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். மற்றொரு சாட்சி அந்த வழக்கிலும் சிங்காரவேல் என்பவர் ஆவார் என்ற சாட்சி பின்னிட்டு ஞாபகமில்லை என்று கூறுகிறார் . இந்த வழக்கில் பிரதிவாதிகள் IA.Nos. 391/2018, 392/2018 மனுக்களை தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை என்று சாட்சி கூறுகிறார் . அந்த மனுக்களுக்கு நான் எதிருரை தாக்கல் செய்ததுகுறித்து எனக்கு தெரியும் . அவ்வாறு நான் தாக்கல் செய்துள்ள எதிருரைகளில் முதலாம் பிரதிவாதி பிஎச்இஎல்லில் பணிபுரிந்தது , நான் திருவரம்பூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது மற்றும் திருவரம்பூர் காவல்நிலையத்தில் மனு ரசீது ஏற்பட்டது மேலும் 2 வது பிரதிவாதி ராமகிருஷ்ணா மெட்ரிக்குலேசன் பள்ளியில் பணிபுரிந்து சம்பளம் பெறுவது ஆகிய அனைத்தும் பொய் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான் . சாட்சி ஜெயபால் பிஎச்இஎல்லில் பணிபுரிந்து வந்தார். நான் வழக்கு தாக்கல் செய்துள்ள 2ம் பிரதிவாதி கனிமொழி தற்போது சாட்சி தேன்மொழி என்று கூறுகிறார் . அவரின் வயது எனக்கு தெரியாது. சுமார் 30 முதல் 35 வயது இருக்கும். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது எனது வாகனமான TN45AB4666க்கு உரியதாகும் . அந்த ஆவணம் பி .வா.சா.ஆ.4 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள வா .சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் கண்டுள்ள கையொப்பமானது 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல . கடனுறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட தொகையானது எனது வீட்டில் வைத்திருந்து அன்றைய தேதியில் கொடுத்தேன். நான் சொல்வதுபோன்று 1, 2 பிரதிவாதிகளை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் 2ம் பிரதிவாதியை தற்போதுவரை நேரடியாக பார்த்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியையும் நீதிமன்றம் மூலம் மத்தியஸ்தம் பேசுகின்ற சமயத்தில்தான் நான் முதல்முதலாக பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோன்று முதல் பிரதிவாதிக்கு

துவாக்குடி பூர்வீகம் அல்ல என்றால் சரியல்ல . நான் சொல்வதுபோன்று பிஎச்இஎல்லுக்கு சவாரிக்கு செல்லும்போது எந்த ஒரு பணியாளரிடமும் பேசி பழகமுடியாது என்று சொன்னால் சரியல்ல . நான் சொல்வதுபோன்று சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் எந்த கடனுறுதிச்சீட்டும் ஏற்படுத்தப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல . அதனால்தான் பிரதிவாதிகளின் வயதை தோராயமாககூட சொல்லமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல . நான் ரூ.12 லட்சத்தையே கடனாக பெறும் சூழலில் உள்ளபோது கடனுறுதிச்சீட்டில் கண்டுள்ள ரூ.35 லட்சத்தை எனக்கு கொடுக்க அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல . இந்த வழக்கானது சாட்சி ஜெயபாலின் துர்போதனையினால் ஏற்பட்ட பொய் வழக்கு என்றாலும் , போலியான ஆவணங்களைக் கொண்டு நான் சாட்சி ஜெயபால் மற்றும் சிங்காரவேல் உதவியுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கு எந்த சூழ்நிலையிலும் என்னை நேரடியாக பார்க்கக்கூடிய சூழ்நிலை ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :-** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd./- K. Babu, 16.08.2022,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.